**2026 ஜூலை மாதம் 02– ஆம் தேதி வியாழக்கிழமை**

**கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி**

**O.S. நெம்பர் : 108/2024**

O.S. No.: 108/2024 – ஜான்சிராணி DW1 02.07.2026

க/பெ.செல்வராஜ்

**சாட்சி அழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:–**

1. நான் எங்கு வசித்து வருகிறேன் என்றால் புதுச்சேரியில் வசித்து வருகிறேன். நான் எத்தனை வருடங்களாக புதுச்சேரியில் வசித்து வருகிறேன் என்றால் சுமார் 30 வருடங்களாக வசித்து வருகிறேன். எனக்கு திருமணம் முடிந்து எத்தனை வருடங்கள் ஆகிறது என்றால் சுமார் 35 வருடங்கள் ஆகிறது. நான் இல்லத்தரசி என்றால் சரிதான். எனது தாயார் சுசீலா என்ன வேலை செய்தார் என்றால் ஆசிரியராக பணிபுரிந்து வந்தார். நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை மற்றும் நிரூபணவாக்குமூலத்தில் உள்ள விபரங்களை வழக்கறிஞருக்கு யார் சொன்னார் என்றால் நான் தான் சொன்னேன்.

2. தாவா 1, 2 சொத்துக்களை எனது தந்தை எனக்கு எழுதிவைத்த வருடம் என்ன என்றால் 2001ம் வருடம் ஆகும். தேதி ஞாபகம் உள்ளதா என்றால் தேதி ஞாபகமில்லை. அந்த உயில் எங்கு வைத்து எழுதப்பட்டது என்றால் சார்பதிவாளர் அலுவலகத்தில் வைத்து எழுதப்பட்டதாகும். எந்த ஊரில் எழுதப்பட்டது என்றால் தேனியாகும். அந்த உயில் எழுதும்போது யார் யார் உடனிருந்தார்கள் என்றால் அம்மா, அப்பா, அண்ணன் மற்றும் தெரிந்த நபர்கள் இருந்தார்கள், எனக்கு ஒருமாதம் கழித்து தெரியவந்தது. தெரிந்த நபர்கள் யார் என்றால் எனது மாமா இருந்ததாக சொன்னார்கள்.

3. உயில் எழுதும்போது நான் உடனிருந்தேனா என்றால் இல்லை. தாவா 1, 2 இலக்க சொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள் என்றால் சரிதான். அந்த உயிலில் சாட்சியாக யார் கையொப்பம் செய்துள்ளார் என்றால் எனது மாமா கையொப்பம் செய்துள்ளார். எதிர்வழக்குரை மற்றும் நிரூபணவாக்குமூலத்தில் சாட்சி கையொப்பம் செய்தது பற்றி குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. உயிலில் கண்ட சொத்து விபரம் தெரியுமா என்றால் ஒரு வீடாகும். அந்த வீட்டின் சர்வே எண் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அந்த வீட்டில் எத்தனை அறைகள் உள்ளன என்றால் 5 அறைகள் ஆகும்.

4. பி.வா.சா.ஆ.4 உயிலில் கண்ட வீட்டிற்கு வீட்டுவரி இரசீது யாரால் செலுத்தப்பட்டு வருகிறது என்றால் எனது தாயார் உயிருடன் இருந்த காலம்வரை அவர் செலுத்திவந்தார், பின்னர் எனது அண்ணன் உயிருடன் இருந்த காலம்வரை அவர் செலுத்தி வந்தார். தற்போது அந்த வீட்டில் யார் குடியிருந்து வருகிறார் என்றால் நான் ஒரு பகுதியில் வசித்து வருகிறேன், மற்றொரு பகுதியில் எனது அண்ணன் மக்கள் வசித்து வருகிறார்கள். மேற்படி சொத்திற்கு மின்சார எண் தெரியுமா என்றால் தெரியாது. எனது அண்ணன் எப்போது இறந்துபோனார் என்றால் 2022ம் வருடம் ஆகும். 2022ம் வரை எனது அண்ணன் தான் அந்த வீட்டில் வசித்து வந்தார் என்றால் சரியல்ல. எனது தந்தை எப்போது இறந்துபோனார் என்றால் 2008ம் வருடம் ஆகும்.

5. உயில் எழுதிவைக்கும்போது, எனது தந்தை இறந்தவுடன் உயில் நடைமுறைக்கு வந்ததால் என் பெயரில் பெயர்மாற்றம் செய்ய வருவாய் துறைக்கு விண்ணப்பங்கள் கொடுத்தேனா என்றால் இல்லை. நாளது தேதிவரை வாதிகள் வீட்டுவரி, தண்ணீர்வரி, மின்சார வரி ஆகியவை செலுத்தி வருகிறார்கள் என்றால் சரியல்ல. எனது தாயார் எப்போது இறந்துபோனார் என்றால் 2020ம் வருடமாகும். எனது தாயார் எவ்வளவு பணம், நகை சேர்த்து

வைத்திருந்தார் என்றால் தெரியாது. எனது தாயார் 50 பவுன் நகை வைத்திருந்தார் என்றால் சரியல்ல. மதுரை கூட்டுறவு வங்கியில் ரூ.26 லட்சம் பிணைத் தொகையாக வைத்திருந்தார் என்றால் சரியல்ல.

6. எனது தாயார் வைத்திருந்த நகைகளை நான் எடுத்துக் கொண்டேன் என்றால் சரியல்ல, நகைகள் அனைத்தும் என்னுடைய நகைகளாகும். வாதிகளுக்கு பொதுவான நகைகளிலிருந்து பங்கு கொடுக்காமல் நானே எடுத்துக்கொண்டேன் என்றால் சரியல்ல. எதிர்வழக்குரையில் தாவா 3ம் லக்க சொத்தை பொறுத்து பாகம் பிரித்துக்கொள்ளலாம் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான், 1, 2 லக்க சொத்துக்கள் உயில் மூலம் கிடைக்கப்பெற்ற சொத்துக்கள் என்பதால் பாகம் கொடுக்க விரும்பவில்லை, 3ம் லக்க சொத்தை பொறுத்து வாதிகளுக்கு பாகம் கொடுக்க எனக்கு ஆட்சேபனை இல்லை.

7. எந்த சொத்துக்களும் எனக்கு பாத்தியம் இல்லை என்றாலும், பூர்வீகச் சொத்துக்கள் என்பதால் வாதிகள் மற்றும் எனக்கு பொதுப்பாத்தியம் என்றால் சரியல்ல. உண்மையில் உயில் எனது பெயரில் எனது தந்தை எழுதியிருந்தால் 2009 லிருந்து எனது பெயரில் வருவாய் துறையில் பெயர் மாற்றம் செய்யாமல் இருந்திருக்க மாட்டேன் என்றும், அவ்வாறு உயில் எழுதாததால் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல, உயில்படி எனது தாயாரின் காலம் முடிந்த பிறகு எனக்கு பாத்தியம் என்று எழுதப்பட்டிருந்தது. எனது அண்ணன் மது போதைக்கு அடிமையாகியிருந்ததால் எனது தந்தையும், நானும் சேர்ந்து உயிலை மாற்றி எனக்கு சாதகமாக எழுதிக்கொண்டேன் என்றால் சரியல்ல.

8. எனது தந்தை பாகப்பாத்திய விடுதலை பத்திரம் எழுதிய தேதியும், பாகப்பிரிவினை பத்திரம் எழுதிய தேதியும், நேரமும் ஒரே நாள், ஒரே நேரம் என்றால் எழுதியபோது எனக்கு தெரியாது. எனக்கு எவ்வளவு நாட்கள் கழித்து தெரிந்தது என்றால் ஒரு மாதம் கழித்து எனக்கு தெரியும். தெரிந்தவுடன் எனது தந்தையிடம் சென்று கேட்டேனா என்றால் இல்லை. சொத்துக்களை அபகரிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் மூடி மறைத்துவிட்டு, எனது அண்ணன் இறக்கும்வரை பேசாமல் இருந்துவிட்டேன் என்றால் சரியல்ல. வாதிகளுக்கு உயில் எழுதிய விபரம் நன்கு தெரியும். 1, 2 வாதிகளின் தந்தையும், 3ம் வாதியின் கணவருமான ராஜாராமன் இறந்த பிறகு நான் வாதிகளிடம் வீடு எனக்கு சொந்தம், நீங்கள் வீட்டை காலி செய்து கொடுக்கும்படி நான் கேட்டவுடன் வாதிகளுக்கு உயில் பற்றி தெரியவந்தது என்றால் சரியல்ல, எனது தாயாருக்கும், எனது அண்ணனுக்கும் தெரியும்.

9. எனது அண்ணனிடம் பாகப்பாத்திய விடுதலை பத்திரம் ஏமாற்றி வாங்கப்பட்டது என்றாலும், பதிவு செய்யப்படாத ஆவணம் என்றால் சரியல்ல. 16.06.1999ம் தேதிய பாகப்பாத்திய பத்திர சாட்சிகளை விசாரிக்க நான் தயாராக உள்ளேனா என்றால் இல்லை. மேற்படி சாட்சிகளை விசாரித்தால் உண்மை என்னுடைய நிலவரம் தெரிந்துவிடும் என்பதால் சாட்சிகளை விசாரிக்க மறுக்கிறேன் என்றால் சரியல்ல. உயிலில் கண்ட சாட்சிகளை விசாரிக்க தயாராக இருக்கிறேனா என்றால் இருக்கிறேன். தாவா 3ம் லக்க சொத்து பூர்வீகச் சொத்திலிருந்து கிடைக்கப்பெற்ற வருமானத்திலிருந்து வாங்கிய சொத்து என்றால் சரியல்ல. தாவா 3ம் லக்க சொத்து பூர்வீகச் சொத்து என்பதால் பாகம் பிரித்துக்கொள்ள நான் தயாராக உள்ளதாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

10. 1 முதல் 3 லக்க சொத்துக்கள் அனைத்தும் பொதுக்குடும்ப சொத்து என்பதால் வாதிகள் வழக்கு தாக்கல் செய்து, அவர்களுடைய பங்கை கேட்கிறார்கள் என்றால் சரியல்ல. எதிர்வழக்குரை மற்றும் நிரூபணவாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள அனைத்து சங்கதிகளும் பொய் என்றால் சரியல்ல. 1 முதல் 3 இலக்க சொத்துக்கள் வாதிகளுக்கு 1/3 பாகம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல. நகை, பணம் அனைத்தையும் நானே வைத்து, சொத்துக்களையும் நானே அடைய வேண்டும் என்ற எண்ணத்துடன் வாதிகளை வெளியேற்ற முயற்சி செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. நான் அனைத்து உண்மைகளும் தெரிந்து கொண்டு, எனது அண்ணன் இறக்கும் காலம்வரை எந்த நடவடிக்கையும் எடுக்காமல், எனது அண்ணன் இறந்தவுடன் அவர்களை வெளியேற்ற வேண்டும் என்ற எண்ணத்துடன் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** – இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 02.07.2026 அன்று வியாழக்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI
Digitally signed by G SREE DEVI
Date: 2026.07.02 18:10:18 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
02.07.2026.